2023 மார்ச் 28]
60—

நூலகம்

***62258—திரு. பொ. அர்ஜூனன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, அன்னம்பாக்கம் கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படியும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படியும், சென்னை மாநகராட்சியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் படிக்கின்ற பள்ளி மாணவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கின்ற வணக்கத்திற்குரிய மேயர், திருமதி பிரியா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடையினை தங்கள் அனுமதியோடு இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதி நேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகுதி நேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழு நேர நூலகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தொகுதி, அன்னம்பாக்கம் கிராமத்தில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை. எனினும், பகுதி நேர நூலகம் அமைக்கக் கோரி தகுந்த கருத்துருக்கள் பெறும்பட்சத்தில் அதைப் பரிசீலித்து, பகுதி நேர நூலகம் அமைத்துத் தர ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2023 மார்ச் 28*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.G. *வெங்கடாசலம் அவர்கள்.*

திரு. A.G. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டித் தேர்வு மற்றும் TNPSC தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவ, மாணவிகள் மற்றும் ஏழையெளிய மாணவர்கள் பெரிதும் எதிர்பார்க்கும் digital நூலகம் அந்தியூரில் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூரில் digital நூலகம் கட்டுவதற்குப் போதிய இடவசதி இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த ஆண்டு அறிவிப்பின்படி, ஒவ்வொரு நூலகத்தையும் wi-fi வசதியுடன் அமைக்க வேண்டுமென்று எண்ணியுள்ளோம். குறிப்பாக, போட்டித் தேர்விலே தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்கின்ற மாணவர்களுக்கு அது உபயோகரமாக இருக்குமென்ற காரணத்தினால்தான் கடந்த ஜனவரி மாதம் முதல்கட்டமாக 500 நூலகங்கள் அந்தவகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அந்தியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள கோரிக்கை இரண்டாம் கட்டத்தில் நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கம்பம் நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதியில் கம்பம், புதுப்பட்டி,

2023 மார்ச் 28]

அனுமந்தம்பட்டி, ஓடைப்பட்டி, உத்தமபாளையம் அம்மாபட்டி ஆகிய பகுதிகளிலுள்ள நூலகங்கள் சிதிலமடைந்துள்ளன. மழைக்காலங்களில் கட்டடத்திற்குள் நீர்க்கசிவு ஏற்பட்டு, அரிய நூல்கள் வீணாகின்றன. நூல்கள் பாதுகாக்கப்பட வேண்டும். வாசகர்கள் அச்சமின்றி நூலகத்திற்குச் சென்று, ஆழ்ந்த சிந்தையோடு பயில வேண்டும். இதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்நூலகங்களில் மராமத்துப் பணிகள் செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா அல்லது குறைந்தபட்சம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கி அந்தப் பணிகளைச் செய்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தருவார்களா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தொகுதியிலிருக்கின்ற மாவட்ட நூலகர் மூலமாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதற்கான தீர்வுகளை உடனடியாக எடுப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். மேலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நூலகத்திற்குச் செலவிடலாமா என்றும் கேட்டிருக்கின்றார். அதற்கும் கலந்தாலோசனை செய்யப்பட்டு அதற்குத் தகுந்தாற்போல் அவற்றிற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியில் அதிராமபட்டினம் நகராட்சியிலும், மதுக்கூர் பேரூராட்சியிலும் உள்ள நூலகங்கள் தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வாடகை நூலகங்களில் இடம் இல்லாத காரணத்தினால், பல்வேறு புகழ்பெற்ற நூல்கள் வாடகைக் கட்டடங்களில் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வைக்கப்பட வேண்டிய ஓர் அசாதாரண சூழ்நிலை*

நிலவி வருகின்றது. எனவே, இந்த இரண்டு இடங்களிலும் புதிதாக நூலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு நூலகம் கட்டப்பட வேண்டுமானால், அதற்கு பல விதிமுறைகள் இருக்கின்றன. அதற்கு ஒரு நிரந்தரக் கட்டடம் கட்ட வேண்டுமானால், 5 சென்ட் இடம் நூலகக் குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும் என்று ஒரு விதி இருக்கின்றது. அதேபோன்று புரவலர்களாக இருவர், அதற்கு ரூ.1000/– கட்டியிருக்க வேண்டும், ஆண்டுச் சந்தா வைப்புத் தொகை நபர் ஒருவருக்கு ரூ.20/– என்றவகையில் 200 நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்க வேண்டும் என்பன போன்ற விதிமுறைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் பூர்த்தி செய்கின்றவகையில்—என் நினைவிற்குத் தவறாதது என்று நினைக்கிறேன்—மாண்புமிகு பட்டுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சென்ற கூட்டத் தொடரின்போதும் இந்தக் கோரிக்கையினைக் கேட்டிருக்கின்றார். அதற்கான குறிப்புகளும் இருக்கின்றன. கண்டிப்பாக, நிதிநிலைக்கேற்ப அவர்களிடமிருந்து அங்கு நிரந்தரக் கட்டடத்திற்கான 5 சென்ட் இடம் வழங்கப்படும் நேர்வில், அக்கட்டடம் கட்டித் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதியில் பேராசிரியர் அன்பழகனார் அய்யா அவர்களை அழைத்து ஒரு நூலகத்தைத் திறந்து வைத்தேன். தற்போது அந்த நூலகம் கடந்தகால ஆட்சியாளர்களால் தனி நபர் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இல்லாமல் இருக்கிறது. அதனை மீட்டு, ஒரே நேரத்தில் 100 நபர்கள் அமர்ந்து படிக்கக்கூடிய ஒரு நவீன நூலகத்தை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு*

2023 மார்ச் 28]
அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நூலகத் துறையும், பள்ளிக் கல்வித் துறையும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. நாங்கள் ஏதேனும் ஒரு பிரச்சினை என்றால், கடலூர் சென்று அணுகி சுலபமாக அந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வோம். தற்போது பள்ளிக் கல்வித் துறையின் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் அனைத்தையும் விருத்தாசலம் கல்வி மாவட்டத்துடன் இணைத்துவிட்டார்கள். நான் இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். பண்ருட்டி-நெல்லிக்குப்பத்திலிருந்து கடலூர் அலுவலகத்திற்கு 500 மீட்டர் தூரம் தான் எல்லை உள்ளது. ஆனால், தற்போது பொதுமக்கள் 60 கி.மீ. போக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனை மறுபரிசீலனை செய்து, மீண்டும் பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகத்தினை கடலூர் மாவட்ட கல்வி அலுவலகத்துடன் இணைப்பதற்கு முயற்சி எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இனமான பேராசிரியர் அவர்கள் திறந்துவைத்த நூலகம் என்னும் நேர்வில் கண்டிப்பாக செய்து தரப்படும். ஏனெனில், பேராசிரியர் அவர்கள் பெயரில்தான் பள்ளி மேம்பாட்டு அறக்கட்டளை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அது நூலகம் என்று சொல்வதால், அதைக் கைவிட்டுவிடாமல் உடனடியாக அதனைச் சரிசெய்கின்ற பணியில் நாங்கள் முழுமையாக ஈடுபட்டிருக்கின்றோம்.

அதேபோன்று, தாங்கள் கேட்ட கேள்வி, பொதுவாக மாவட்டக் கல்வி அலுவலகத்திலிருந்து கேட்கப்பட்ட கேள்விதான். Geographical அடிப்படையில்தான் எந்தெந்த இடங்களில் என்று pinpoint செய்யப்பட்டு பணிகளை மேற்கொண்டால் சரியாக இருக்கும் என்று பொதுமக்கள் travel செய்யக்கூடிய சூழ்நிலையையும் கருத்தில் கொண்டுதான் முடிவெடுக்கப்படுகின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருகில்,

500 மீட்டர் தூரத்தில் தான் கடலூர் அலுவலகம் உள்ளது என்று சொல்கின்ற நேர்வில், கண்டிப்பாக அதற்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அதைக் கொண்டுவருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. முன்பண மானியக் கோரிக்கைகள், 2023–2024, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023–2024 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–10

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையின்முன் வைக்கிறேன்.

2023–2024 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	56,98,47	—	65,00
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	34,66,55	—	—
3	நீதி நிருவாகம்	906,23,42	—	—